
NSW GOVERNMENT | Education




# பணியிட அனுபவக் கல்வி பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்களுக்கான தகவல்கள்

## Workplace Learning Information for Parents and Carers

Tamil

**எந்தவொரு பணியிடக் கல்வித் திட்டத்தின் வெற்றிக்கும் பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்களது ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். வீட்டில் உங்கள் பிள்ளைக்கு உதவியாக இருப்பதன் மூலம், அவர்களது எதிர்காலத்தைப் பற்றிய முக்கியமான முடிவுகளை உங்கள் பிள்ளை மேற்கொள்ளவும், அவர்களது பணியிட அனுபவத்தினை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவும் உங்களால் உதவ இயலும்.**

## Workplace Learning (பணியிட அனுபவக் கல்வி)

பணியிட அனுபவக் கல்வித் திட்டங்களானவை செகண்டரி பாடத்திட்டத்தின் பகுதிகளாகும். திட்டமிடப்பட்ட காலப்பகுதி ஒன்றினைப் பணியிடத்தில் கழிக்க இத் திட்டங்கள் மாணவர்களுக்கு ஏது செய்கின்றன. மாணவர்களது வகுப்பறைப் பாடங்கள், அவர்களது வாழ்க்கைத்தொழில் விருப்பத்தெரிவுகள் மற்றும் அவர்களது தொழிலிடத் திறன்கள் ஆகியவற்றை இந்த அனுபவமானது மேம்படுத்துகிறது. இதில் ஊதியம் எதுவும் உள்ளடங்காது.

## பணியிட அனுபவக் கல்வியின் பயன்கள்

பணியிட அனுபவக் கல்வியானது மாணவர்களுக்குப் பின் வரும் விடயங்களில் உதவுகிறது:

- வேலை செய்யும் இடங்களில் ஒருவரோடொருவர் தொடர்பாடல் கொள்ளும் விதம் மற்றும் அனைவரும் இணைந்து அணியாகப் பணியாற்றும் விதம் போன்ற பணியிடத் திறன்களை வளர்த்தல்
- அவர்களது Vocational Education and Training (VET) (தொழிற்கல்வி மற்றும் பயிற்சி) கற்கை நெறியோடு சம்பந்தப்பட்ட தொழில் திறன்களை வளர்த்தல்
- பாடசாலையில் பயிலும் பாடங்களையும், பாடசாலைக் கல்விக்குப் பிறகு அவர்களது வாழ்க்கைத் தொழில் பாதையைக் குறித்தும் திட்டமிடல்

## பணியிட அனுபவக் கல்வித் திட்டங்கள்

**'வேலை அனுபவம்' (Work Experience)** என்பது பொதுவாக மாணவர்களால் Years 9 அல்லது 10- இல் மேற்கொள்ளப்படும், Years 11அல்லது 12-இலும் சில வாய்ப்புகள் உள்ளன. 'வேலை உலகம்' எப்படியிருக்கும் என்பதற்கும், சாத்தியமான வாழ்க்கைத் தொழில்களுக்குமான பொதுவான ஒரு முன்னுரையை இது அளிக்கும். அவர்களது திறன்களுக்கு ஏற்ற அளவிலான, மேற்பார்வை செய்யப்படும் வேலைப்பணிகளை மாணவர்கள் மேற்கொள்வார்கள்.

தொழில்துறைகளால் அங்கீகரிக்கப்பட்ட Higher School Certificate (HSC) (உயர்நிலைப் பாடசாலைச் சான்று) பாடத்திட்டங்களில் சேர்ந்துள்ள மாணவர்களுக்காக **'வேலை அமர்த்து'** த் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வேலைஅமர்த்தலின்போது,தொழில்துறைகளின் தர நிலைகளை எட்டும் விதத்தில் மாணவர்கள் தாம் கற்கும் விடயங்களைப் பயிற்சி செய்வர். குறிப்பிட்ட தொழில்துறை சார்ந்த பாடத்திட்டங்களைக் கொண்ட படிப்புகளில் 'வேலை அமர்த்தல்' என்பது கட்டாயமான HSC தேவையாகும். Work Placement Service Provider (வேலை அமர்த்து சேவை வழங்குனர்) ஒருவரது மூலமாக பாடசாலையானது வேலை அமர்த்தல்களை ஒழுங்கு செய்யும்.

## பயண ஏற்பாடுகள்

பெரும்பாலான வேலை அமர்த்தல்கள் வீட்டிலிருந்து சென்றுவரக் கூடிய அளவிலான தூரத்திலேயே இருக்கும்.

பயணச் செலவுகள் அனைத்தும் மாணவருடையதே. வேலை அமர்த்தல் காலத்தில் பயண ஏற்பாடுகளிலும், மாணவர்களுக்கு ஆகும் பயணச் செலவுகளிலும் அவர்களுக்கு உதவியாக இருக்குமாறு நீங்கள் எதிர்பார்க்கப்படுவீர்கள்.

உங்களுக்கு ஏதும் கரிசனங்கள் இருந்தால் அவற்றை உங்கள் பிள்ளையுடனும், திட்ட ஒழுங்கமைப்பாளருடனும் நீங்கள் கலந்துரையாடுவது நல்லது.

**குறிப்பு:** வீட்டிற்கு அப்பாலிலுள்ள, வேறு அல்லது மாநிலம் கடந்த இடம் ஒன்றிலான வேலை அமர்த்தல் ஒன்றை உங்கள் பிள்ளை கருத்தில் கொண்டால், நீங்கள் உங்கள் பிள்ளையின் பாடசாலையுடன் தொடர்புகொள்வது நல்லது. வேலை அமர்த்தல் பொருத்தமானதா என்பதைப் பாடசாலை அதிபர் அங்கீகரிக்கும் முன்பாகக் கூடுதல் ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டாக வேண்டும்.

## மாணவருடைய பாதுகாப்பு மற்றும் அவசரநிலைகள்

மாணவர்களது மற்றும் குழந்தைகளது பாதுகாப்பிற்கு NSW Department of Education முன்னுரிமை அளிக்கிறது.

மாணவர்கள் வேலை அமர்த்தலில் இருக்கும்போது நேரிடும் மயிரிழையில் தப்பிய நிகழ்வுகளை உள்ளடக்கிய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் குறித்த விடயங்களை வேலை கொடுத்த பணியமர்த்துனர்கள் பாடசாலைக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும். மாணவர்களது படிப்பானது TAFE அல்லது தனியார் அல்லது சமூக அமைப்பின் மூலமாக இருந்தால் பணியமர்த்துனர்கள் அவர்களுக்கும் உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும். https://education.nsw.gov.au/teaching-and-learning/curriculum/career-learning-and-vet/workplace-learning/keeping-students-safe

மாணவரது 'மெடிகெயர்' இலக்கம் (அல்லது மருத்துவருடைய தொலைபேசி இலக்கம்) மற்றும் அலுவலக நேரம் மற்றும் அலுவலக நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திற்கான தொடர்பு விபரங்கள் ஆகியவற்றை அட்டவணைப்படுத்தும் Student Contact Card (மாணவர் தொடர்பு அட்டை) ஒன்று உங்கள் பிள்ளையிடம் இருக்கும். அவசர நிலை ஒன்று நேரிட்டால் இந்தத் தகவல்கள் முக்கியமானதாக இருக்கும்.

பாதுகாப்பு குறித்த கரிசனங்கள், ஆபத்துகள் அல்லது நிகழ்வுகள் எதனையும் மாணவர்கள் உடனே அவர்களது பணியமர்த்துனர்கள், பாடசாலை, TAFE அல்லது தனியார் அல்லது சமூக அமைப்பினது பதிவுபெற்ற பயிற்சி நிறுவனத்திற்கு கூடிய விரைவில், ஆனால் 24 மணி நேரத்திற்குள்ளாகத் தெரியப்படுத்த வேண்டும். உங்கள் பிள்ளைக்குக் கரிசனங்கள் ஏதும் இருந்தாலோ, காயம் எதுவும் ஏற்பட்டாலோ, ஆபத்தில் இருப்பதாக உணர்ந்தாலோ மற்றும் தமக்கு வேலை கொடுத்தவரிடம் பிரச்சினையைப் பற்றிப் பேச இயலாமல் இருந்தாலோ, பாடசாலையையோ அல்லது அவசரகாலத் தொடர்பினையோ உங்கள் பிள்ளை உடனே அழைக்க வேண்டும்.

## காப்பீடு மற்றும் முன்காப்பீடு (Insurance and indemnity)

அங்கீகரிக்கப்பட்ட பணியிட அனுபவக் கல்வியில் பங்குபற்றும்போது காயமடையும் மாணவர்களுக்கான காப்பீட்டு ஏற்பாடுகளைத் திணைக்களம் கொண்டுள்ளது. மேலதிகத் தகவல்களுக்குக் கீழேயுள்ள இணைப்பில் Workplace Learning Guide for Parents and Carers எனும் பகுதியைப் பாருங்கள்.

https://education.nsw.gov.au/teaching-and-learning/curriculum/career-learning-and-vet/workplace-learning/guides-and-forms

## உடலியலாமை மற்றும் மருத்துவ நோய் நிலைகள் உள்ள மாணவர்கள்

பணியிடத்தில் உங்களது பிள்ளையின் பாதுகாப்பு, பொதுநலம் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றின் மீது தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் உங்கள் பிள்ளையைப் பாதிக்கும் உடலியலாமை, கற்றல் மற்றும் ஆதரவுதவித் தேவைகள், மருத்துவ நோய் நிலை (உதாரனத்திற்கு 'அனஃபிலாக்ஸிஸ்' எனும் ஒவ்வாமை ஏற்படும் ஆபத்து இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள நிலை) அல்லது கட்டுப்பாடுகள் எதுவும் இருந்தால், நீங்கள் அதைப் பாடசாலைக்கு, TAFE அல்லது தனியார் அல்லது சமூக அமைப்பினது பதிவுபெற்ற பயிற்சி நிறுவனத்திற்குக் கூடிய விரைவில் தெரியப்படுத்த வேண்டியிருக்கும்.

வேலை தரும் பணியமர்த்துனர்களுக்கு சுகாதாரக் கவனிப்புத் திட்டங்கள் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், உங்களுடைய பிள்ளையின் பொது மருத்துவருடன் பேசுங்கள்.

வேலை செய்யும் இடத்தில் ஆதரவுதவித் தேவைகளுக்காக மாற்றியமைப்புகள் செய்ய வேண்டிய தேவைகள் எதுவும் உங்கள் பிள்ளைக்கு இருந்தால், பணியமர்த்தலுக்காகத் திட்டமிடும் சமயத்தில் இதைப் பற்றி TAFE அல்லது தனியார் அல்லது சமூக அமைப்பினது பதிவுபெற்ற பயிற்சி நிறுவனம் மற்றும் பாடசாலையுடன் இணைவாகக் கலந்துரையாடுங்கள். இந்தத் தகவல்கள் உங்கள் பிள்ளையின் Student Placement Record ('மாணவர் வேலை அமர்த்தல் பதிவேடு')-இல் பதிக்கப்பட வேண்டும்.

## மேலதிகத் தகவல்கள்

1. உங்கள் பிள்ளைக்கான பணியிட அனுபவக் கல்வித் திட்டத்தினை பாடசாலை உருவாக்கிய பிறகு, உங்கள் பிள்ளையின் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
2. திணைக்களத்தின் உள்ளூர்ப்பகுதி அலுவலகத்திலுள்ள பணியிடக் கல்விக்குப் பொறுப்பாக இருக்கும் 'மூத்த மாணவர்களுக்கான வாழ்க்கைத்தொழில் வழித்தட அலுவல'(Senior Pathways Officer)ருடனும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். இதற்கான தொடர்பு விபரங்களைப் பாடசாலையிலிருந்து பெறலாம்.
3. உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், தயவு செய்து 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யை 131 450 எனும் இலக்கதில் அழையுங்கள்.

***Senior Pathways, Pathways and Transitions***
*NSW Department of Education*
*seniorpathways@det.nsw.edu.au*